இருக்கும்போது, நம்மை விடவா வேறு ஒரு புத்திசாலியை உருவாக்க வேண்டிய அவசியம் வந்து தண்ணீருக்குள்ளே போய்ப் பிறக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 204. திரு. ஆர். ஈஸ்வரன். இருக்கையில் இல்லை.

வினா எண். 205, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. தா. வேடியப்பன் கேட்கிறார்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

205—

புதிய பேருந்துப் பணிமனைகள் ஏற்படுத்தல்.

*11559—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணிமனை (Bus Depot) இல்லாத சட்டமன்ற தொகுதிகளில் பணிமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பணிமனை இல்லாத சட்டமன்ற தொகுதிகளில் தேவைகளுக்கேற்ப சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனை இல்லாத சட்டமன்றத் தொகுதிகள் எங்கெங்கு இருக்கின்றன என்று ஆராய்ந்து, அதற்குண்டான நடவடிக்கை எடுத்து அடுத்த நிதியாண்டிலாவது, ஏற்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைகளுக்குகேற்ப என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல எல்லா இடங்களிலும், நகரப் பேருந்துகளை நாம் இயங்கிக்கொண்டிருக்கிறோம். சில இடங்களிலே

1993 ஏப்ரல் 1]

அங்கே தொகுதிகளுக்கேற்ப பணிமனைகள் அமைக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதைக் கருத்திலே கொண்டுதான் தேவைக்கேற்ப என்று குறிப்பிட்டேன். தேவை ஏற்படுமாயின் உடனடியாக அந்தப் பணிமனைகள் அங்கே அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கி. பாலசுப்பிரமணியன்:

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த அதிராம்பட்டினம் ஒன்றியத்திலே புதிய பஸ் ஸ்டேன்ட் அமைப்பதற்காக வேண்டிய இடங்கள் எல்லாம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த ஊர் வளர்ச்சியடையும் நிலைமையில் இருக்கிறது. அயல்நாட்டு பயணிகளும் வருகை தருகிறார்கள். அந்தத் தொகுதியை விரிவுபடுத்தும் வகையிலே இந்த பஸ் டெப்போ ஒன்றை அமைப்பார்களா என்று கேட்டுகொண்டு, அதற்கு விரிவுபடுத்தும் வகையிலே பஸ் ஸ்டேன்டு அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கிறது. பேருந்து நிலையம் அமைக்கவேண்டும் என்று சொன்னால், அவர்தான் அதற்குப் பொறுப்பு. ஆனால் பணிமனைகள் அமைப்பதன் காரணமாக வெளிநாட்டிலேயிருந்து வரும் பயணிகள் அங்கே வருவதற்கு வாய்ப்பே இல்லை. பணிமனை என்பது இருக்கின்ற பேருந்துகளை பராமரிப்பதற்காகவும், நகரப் பேருந்துகளை இயக்குவதற்கும்தான் பணிமனைகள் அமைக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் பணிமனைகள் அமைப்பது பற்றியது. திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய பெரணமல்லூர் தொகுதியில் 35 கிலோ மீட்டர் தூரம் விட்டம் அடங்கிய தொகுதியாக உள்ளது. போக்குவரத்துக் கழகத்தில் விடப்பட்ட பஸ்கள் ரிப்பேர் என்று ஏதாகிலும் நின்றுவிட்டால் ரிப்பேர் செய்து செல்ல வேண்டுமென்று சொன்னால் மீண்டும் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு சென்றுதான் ரிப்பேர் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இரவு நேரங்களில் நிறுத்த வேண்டுமென்று சொன்னால், 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஆரணி, செய்யாறு,

வந்தவாசி பகுதிக்கு சென்றுதான் நிறுத்த வேண்டும். காலையில் டிரிப் எடுத்து மீண்டும் தொகுதிக்குள் வந்து மக்களை ஏற்றிக் கொண்டு செல்கிறார்கள். எனவே என் தொகுதியை மையமாக கொண்டு பெரணமல்லூர் பேரூராட்சியிலே அல்லது சேத்துப்பட்டு பேரூராட்சியிலே மையமாகக் கொண்டுள்ள அந்த இரண்டு இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் பணிமனை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்ப என்று நான் குறிப்பிட்டேன். 6 ஆம் தேதி என்னுடைய மானியக் கோரிக்கை வருகின்றபோது, எந்தெந்த பகுதிகளிலே பணிமனைகள் அமைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 206, திரு. பி.ஆர். எஸ். வெங்கடேசன், திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

206—

அரசு பேருந்து கழகத்திற்கு மூதறிஞர் இராஜாஜியின் பெயர்

*14709—திரு. பி.ஆர்.எஸ்.வெங்கடேசன் :

திரு. எ. தெய்வநாயகம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பேருந்துகளில் ஏதாவது ஒன்றை மூதறிஞர் இராஜாஜியின் பெயரில் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தப் பேருந்துக் கழகத்திற்குப் பெயரிடப்பட்டு எப்போது முதல் அமலுக்கு வரும்?

மாண்புமிகு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.